RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s912

# தமிழ்ப் பண்பாட்டில் புறக்கணிக்கப்படும் முதுமை

**சோ. சுகன்யாதேவி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தேவாங்கர் கலைக் கல்லூரி, அருப்புக்கோட்டை-626101, தமிழ்நாடு, இந்தியா.

# Aging that is Neglected in Tamil Culture

**S. Suganyadevi** [a, *]

[a] Department of Tamil, Devangar Arts College, Aruppukkottai-626101, Tamil Nadu, India

* Corresponding Author:
ns.suganyadevi@gmail.com

Received : 14-07-2021
Revised : 19-05-2022
Accepted : 27-05-2022
Published : 28-07-2022

Check for updates

**ABSTRACT**

Avvaiyaar said, "It is rare to be born as a human." All human beings have to pass through the two seasons of youth and old age. Youth and old age, as the seasons of human life, both signify impermanence. It was because it was difficult to get through youth that they prayed to God for old age. Born as human beings, we must someday reach old age. When we were children, as boys and teenagers, our parents were the ones who observed our behavior, taught us morals, solved our problems, and guided us well. As the saying goes, "Old people say and cranberry is bitter first and then it will be sweet," the opinions of aged parents are not sweet for young adults. Only after suffering in life do they understand the meaning of words said by their parents. Our parents are multi-talented, like good teachers, uneducated geniuses, and doctors, but most of the parents who have so many talents are isolated at home or put in old age homes due to their age. The increasing number of aged homes can be attributed to the fact that in today's mechanised world; middle-aged people are unable to care for their parents. Some children don't care about parents who believe that their children are their world. Parents, who in their youth considered the welfare of their family and thought that work was breathing, started enjoying the world only in their old age. At the time when they start enjoying the world, they are hated and shunned by the very children they cherished as their world. The importance given to pets is not given to parents. They are thrown out of the house by their children at an age when they yearn for their love and warmth. Otherwise, they are treated as unpaid workers. Respect for the age and experience of the elderly is also denied by our society. Respecting the elderly is a Tamil tradition. That is why many songs and works about the elderly have been published in Sangam literature that has appeared in the Tamil language and in modern literature. Many songs and works on the elderly have been published by many researchers. Many studies and articles have been written on the elderly by many researchers. Puthukkavithai (free verse), which is one of the modern literary genres, deals with issues related to the elderly. This article is intended to explain the problems related to the elderly in free verse with the help of the themes found in the poems of the selected poets related to old age issues.

**Keywords:** Tamil Culture, Age Issues, Parents, Old Age Homes

## முன்னுரை

பண்பாடு என்ற சொல் 'culture' என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் ஆக்கமாக இரசிகமணி டி.கே.சி அவர்களால் அறிமுகம் செய்யப்பெற்றது. பண்பாடு என்ற சொல்லிற்கான சரியான விளக்கத்தைத் தர ஆன்றோர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் தர எவ்வளவோ முயற்சி செய்தாலும் பண்பாடு என்ற

சொல்லிற்கான முழுமையான விளக்கம் இதுகானும் கிடைக்கவில்லை என்றே கூறலாம். தமிழர்களுக்கான பண்பாடுகளாக நம்முன்னோர் பலவற்றைப் பட்டியலிட்டுக் கூறியுள்ளார். விருந்தோம்பல், உதவி செய்தல், இவை மட்டும் பண்பாடு ஆகாது. 'பெரியோரைப் பேணல்' என்பதும் பண்பாடு என்ற கட்டமைப்பில் அடங்கும். அதனால் தான் திருவள்ளுவரும் உலகப்பொதுமறையாம் திருக்குறளில் 'பெரியாரை துணைக்கோடல்' என்ற அதிகாரத்தில் பெரியோரின் முக்கியத்துவத்தைக் குறள் வழி உணர்த்தியுள்ளார். இங்கு பெரியார் என்ற சொல் சான்றோர்களைக் குறிப்பதோடு மட்டுமல்லாது வயதில் மூத்த நபர்களையும் குறிப்பதாய் அமைந்துள்ளது எனலாம். இன்றைய நாகரீக காலத்தில் வீட்டில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகளுக்கு தரப்படும் முக்கியத்துவமானது முதியவர்களுக்குத் தரப்படுவதில்லை. வீட்டில் முதியவர் இருந்தால் மருத்துவர் துணை தேவை இல்லை. ஆனால் இன்றோ எதற்கெடுத்தாலும் மருத்துவரைத்தேடி அலையக்கூடிய நிலைமைக்கு நம்மில் பெரும்பாலானோர் ஆட்பட்டுள்ளனர். மருத்துவர், வானியல் நிபுணர் இன்னும் பல திறமைகளைத் தன்னகத்தேக் கொண்டு படிக்காதவராய் இருந்தாலும் அனைத்து துறைகளிலும் மேம்பட்டவராய் இருக்கக்கூடிய முதியோர்களை அந்நியப்படுத்தி வைத்துள்ள நிலையினை புதுக்கவிதை வழி ஆராய்வதாய் இவ்வாய்வு அமைகின்றது.

## பண்பாடு - விளக்கம்

பண்பாடு என்பது பிறப்பினால் அல்லது கல்வியினால் மட்டும் வருவது அன்று அது இயல்பாக அமைவது. உவர்மண் நிலத்திலும் நல்லநீர் தோன்றும் மலைநிலத்திலும் உப்புநீர் தோன்றும். எனவே, எந்த நிலத்திலும் எந்த நீரும் தோன்றுதல் போல், எவ்வகைப் பிரிவிலும் எவ்வகை மாந்தரும் தோன்றுவார். எனினும் மக்கள் என்று சிறப்பித்துச் சொல்லப் பெறுபவர் மனத்தின் மாண்புடையவரே ஆவர் என்பது நாலடியார் கருத்தாகும்.

'கடல் சார்ந்தும் இன்நீர் பிறக்கும் மலை சார்ந்தும்

உப்பீண் டுவரி பிறக்குமால் தத்தம்

இனத்தனையர் அல்லர் எறிகடல் தண்சேர்ப்ப

மனத்தனையர் மக்கள் என் பார்'

இப்பாடலானது மனப்பக்குவத்தின் மூலமாகத்தான் பண்பாடு வெளிப்படும் என்பதை வலியுறுத்துகிறது (Puliyur Kesikan, 2010).

'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்கிறது. இப்பாடல் பண்பாட்டினைப் புரிந்து கொள்ள பெரிதும் உதவும். மனிதகுலம் முழுமைக்கான பண்பாடு குறித்து கூறுகையில்,

'பிறர்மறை யின்கண் செவிடாய்த் திறனறிந்து

ஏதிலார் இற்கண் குருடனாய்த் தீய

புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்

அறங்கூற வேண்டா அவற்கு'

என நாலடியார் கூறுகிறது. இத்தகைய ஒழுக்கமுடையவனே பண்பாடு வாய்ந்தவன் (Puliyur Kesikan, 2010).

## வதைக்கப்படும் வயதான குழந்தைகள்

ஒரு மனிதர் தன் பெற்றோருக்கு கொட்டாங்குச்சியில் உணவு கொடுப்பாராம். அவர்கள் உண்டபின் எறிந்த கொட்டாங்குச்சிகளை அவ்வீட்டில் இருந்த சிறுவன் சேகரித்து வைப்பானாம். ஏன்? என்று அவனது தந்தை கேட்டதற்கு, எதிர்காலத்தில் உங்களுக்கும் இந்த கொட்டாங்குச்சி தேவைப்படும் தானே என்று கூறினானாம் அச்சிறுவன்.

நம்நாட்டில் இன்று பல வீடுகளில் மூப்பின் காரணமாக குழந்தை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள முதியோர்கள் இருக்கின்றனர். மக்கள் தமக்கான பண்பாட்டை மறந்து இரக்கமற்று தம்பெற்றோரை வார்த்தைகளால் வதைப்பது, புறக்கணிப்பது, அடிப்பது போன்ற கொடுமைகளைச் செய்து வருகின்றனர். பெற்றோரைப் புறக்கணிக்கும் அளவிற்கு பிள்ளைகளின் மனம் மாறிப்போனதற்குக் காரணம் கூட்டுக்குடும்ப அமைப்பு இல்லாமல் போனதுதான். கூட்டுக்குடும்பத்தில் வயதானவர்களுக்கு பாதுகாப்பும், மரியாதையும் இருந்தது. குழந்தைகளை நல்வழிப்படுத்துவதில் பெரியோர்களின் பங்கு பிரதானமானதாக இருந்தது. இன்று நாகரீகம் என்ற பெயரில் கூட்டுக்குடும்பம் என்ற அழகிய பண்பாட்டைத் தொலைத்ததோடு மட்டுமில்லாமல் முதியோர்களையும் அந்நியப்படுத்தி வைத்துவிட்டோம்.

அடித்து உதைப்பது மட்டும் வன்முறை அல்ல பெரியோர்களை ஒதுக்கி வைப்பதும் சுடுசொற்களால் வதைப்பதும் வன்முறைதான். இத்தகைய வன்முறைகளிலிருந்து முதியோர்களைக் காக்க அரசாங்கத்தால் பல சட்டங்கள் இயற்றப்பட்டாலும் இச்சமுதாயத்தில் முதியோர்கள் தனித்துவிடப்பட்டவர்களாகவே உள்ளனர்.

## புதுக்கவிதை வழி புறக்கணிக்கப்படும் முதுமை

வயதான தன் தாய் தந்தையரைத் தன் இரு தோள்களிலும் தூக்கிச்சென்று அவர்களை புனித யாத்திரை செய்ய வைத்த ஷ்ரவணன் பிறந்த பொன்னாடு இது. பெற்றோரையும் பெரியவர்களையும் மதித்தும் மரியாதை செலுத்தியும் பேணிக்காத்த பண்பாட்டுக்குச் சொந்தக்காரர்கள் நாம். ஆனால் இன்றைய நாகரீகயுகத்தில் முதியோர்கள் தமக்கான வீட்டில் இல்லாமல் முதியோர் இல்லங்களுக்கு தள்ளப்படுகின்றனர்.

'மூத்தோர் சொல்லும் முது நெல்லிக்கனியும்

முன்னே கசக்கும் பின்னே இனிக்கும்'

என்கிற முதுமொழி நாம் அறிந்ததே. இதேபோல் தம் அனுபவங்களை நினைவுகூர்ந்து இளையோரை நல்வழிப்படுத்தத் தம் அனுபவங்களை எடுத்துச் சொல்வர். பெற்றோர் சொல்லுக்கு மதிப்பளிப்பவர்களே தங்கள் வாழ்க்கையில் உயர்நிலைக்குச் சென்றுள்ளனர். ஆனால், இன்றைய காலகட்டத்தில் நம்வீட்டில் வயதில் மூத்தோர் இல்லாததால் நம் வாழ்க்கையானது ஒருமோசமான பாதையை நோக்கி பயணப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது நாம் அனைவரும் ஏற்றுகொள்ளக்கூடியதாய் உள்ளது. பரபரப்பான, இயந்தரமயமான உலகில் பணத்திற்கு தரப்படும் முக்கியத்துவம் அன்பு, நேசம், காதல் இவற்றிற்குத் தரப்படுவதில்லை. 'பொருள் தேடும் எண்ணம் மிதமிஞ்சிப் போவதால், தன் பெற்றோரைக் கவனிக்கும் கடமையிலிருந்து இன்றைய நாகரீக மனிதர்கள் தடம்மாறிப் போய் விடுகின்றனர்". மேலும் இவரே "இந்திய அளவில் எடுத்துக் கொண்டால் மிக அதிகப்படியான முதியோர் இல்லங்கள் கேரள மாநிலத்தில் தான் உள்ளன. இரண்டாம் இடத்தில் தமிழகம் இருக்கிறது" (Raja, 2002).

மரணத்தைத் தழுவும் நிலையில் இருந்த மார்க்கண்டேயன் சிவபெருமான்மீது கொண்ட பக்தியின் காரணமாக மரணத்தைத் தழுவாது சிரஞ்சீவியாய் வாழ்ந்தார் என்பது புராணக்கதை. இன்று யாரும் மார்க்கண்டேயர் ஆக முடியாது. இன்று இளம் வயதினராய் இருக்கும் நாம் ஒவ்வொருவரும் காலச் சுழற்சியின் காரணமாக என்றேனும் ஒருநாள் முதுமையை அனுபவித்தே தீரவேண்டும் என்பதை,

'அப்பத்தா முடங்கி கிடந்த அதே மூலை

ஈசிச்சேரில் சாய்ந்தபடி நான்!

சப்தங்கள் புலப்படாமல்

ஓசைகள் அந்நியமாயின

வெற்றுச் சுமையாய் காதுகள்!

வீடு விசேஷ பரபரப்புடன்

அசாதாரண சூழலில்

சின்னப்பேத்திக்கு திருமணம்

என்னைக் கடந்து மகன்களும், மகளும்

இடைமறித்தால்

'உனக்கு ஒன்னும் புரியாதப்பா

இவர் ஒருத்தர் என சலிப்பது போல்

பாவனை

முகஞ்சுருங்கினேன்

.................................

அப்பத்தா உன்முகத்தின் சுருக்கங்களை

இப்போது புரிந்துகொள்ள முடிகிறது

வரிகளுக்கிடையே புதைந்து கிடந்தவை வருடங்களல்ல

வருத்தங்களும், உதாசீனங்களும் தான்' (Neiveli Bharathikumar, 2004).

என்ற கவிதைவரியானது,

'தீதும் நன்றும் பிறர்தர வாரா'

என்று கூறிய கணியன் பூங்குன்றனாரின் கூற்றை மெய்ப்படுத்துவதாய் அமைந்துள்ளன எனலாம் (Balasubramanian, 2004).

இன்றைய காலகட்டத்தில் பணமும், ஆடம்பரமுமே வாழ்க்கையாகிவிட்டன. பணத்தின் தேவை அதிகமாகிவிட்ட இன்றைய நாட்களில் பணத்தை தேடிப் பறக்கும் இளம்தலைமுறையினர் தம் பெற்றோர்களை சுமையாகக் கருதுகின்றனர். வீட்டில் உள்ள பொருட்களுக்கு இருக்கக்கூடிய முக்கியத்துவம் பெரியோர்களுக்குத் தரப்படுவதில்லை என்பதனைக் கவிஞர் லாவண்யா சுந்தரராஜன்,

'சுற்றுச் சுவரோடு

வாசல் இரும்புக் கதவில்

அஞ்சல் இட ஒருபெட்டி

அன்றாடும் ஓடும்

தண்ணீர் மின்னியக்கிக்கு

தகரத்தான் ஆன சிறுவீடு

பிரியரங்கனின் விதவிதமான

புகைப்படங்களுடன்

ஏனைய கடவுளர்க்கும்

மணிகதவம் கொண்ட

பெருமாள் படியுள்

.......................................

குப்பைத் தொட்டிக்குக்கூட

சமையலுள்ளில்

கதவோடு இடம் ஒன்று

தாளிக்கும் கடுகுக்கும்

அஞ்சறைப் பெட்டியில் இடம்

காலணிகளை வைக்கவோ

ஷீராக்

எல்லாவற்றுக்கும் இடமிருக்கிறது

வயதேறிய குழந்தையான

பெற்றோர் தவிர.....’

என்ற கவிதை வரிகள் வழி விளக்குகிறார் (Lavanya Sundararajan, 2010).

## சம்பளமில்லா வேலைக்காரராய் மாறிப்போன முதியோர்

ஒரு சில நேரங்களில் முதியோர் இல்லங்களில் விடப்பட்ட பெற்றோரை மீண்டும் தம் வீட்டிற்கு அழைத்து வர விரும்புவர். முதியோர் இல்லங்களில் விடப்பட்ட பெற்றோரை மீண்டும் தம் இல்லத்திற்கு அழைத்து வருதல் என்பது பெற்றோர் மீது கொண்ட அன்பின் காரணமாகவோ அல்லது தாம் செய்த தவறினை திருத்திக் கொள்ளவோ அல்ல, தம் வீட்டில் வேலை செய்யும் வேலையாட்களுக்குப் பதிலாக ஊதியமில்லா வேலையாளாய் வைத்துக் கொள்ளத்தான் என்பதை,

'வீட்டு வாடகை கட்ட

போறதுக்கு ஆளில்லை

கரண்ட் பில்லுக்கு

நாளை கடைசித்தேதி

மளிகைக் கடையில் போயி

பொருள் வாங்கிவரணும்

வீட்டு முன்னாடி

குப்பையெல்லாம் அப்படியே

தேங்கிக்கெடக்கு

இந்த குழந்த வேற

அட்ட போட்டுக்குடுன்னு

ஒரே தொந்தரவு

ஆபிஸிலிருந்து

வீடு திரும்புறதுக்குள்ள

தண்ணீ நின்று போகுது

புடிச்சு வைக்க ஆளில்லை

போனா போகுது

ஒருமூலையில் கெடக்கட்டும்

உங்க அப்பாவ போயி

முதல்ல கூட்டிட்டு வாங்க

முதியோர் இல்லத்திலிருந்து'

என்ற கவிதைவரிகள் மூலம் விளக்கியுள்ளார் (Arun Bharathi, 2009). பணத்திற்கு தரக்கூடிய முக்கியத்துவம் என்பது உறவிற்கு தரப்படுவது இல்லை. வயதான காலத்தில் பெற்றோர்களை ஓய்வெடுக்கவிடாமல் தம் வீட்டின் வேலைகளைச் செய்யும் வேலையாட்களாகவே வைத்துக் கொள்ளவே இன்றைய இளம் தலைமுறையினர் விரும்புகின்றனர் என்பதை இக்கவிதை விளக்குகின்றது.

குழந்தைகள் எப்படி கடவுளுக்குச் சமமானவர்களோ அதைப்போலத்தான் பெரியவர்களும். வீட்டிலுள்ள பெரியவர்களைக் கடவுளாக நினைத்து வழிபடாவிட்டாலும் அவர்களுக்கான மரியாதையைக் கொடுத்தல் மட்டுமே போதுமானது. இந்த அடிப்படைப் பண்பென்பது இல்லாத இன்றைய இளம்தலைமுறையினர் தம் பெற்றோர்களை முதியோர் இல்லத்தில் விட்டுவிட்டு, தம் வாழ்க்கை வளம்பெற வேண்டிப் பலவிரதங்களை மேற்கொள்கின்றனர். கடவுளின் அருளைப் பெற விரும்பும் இளையவர்கள் தம் வீட்டு மூத்தோர்களின் அன்பைப் பெற விரும்புவது இல்லை என்பதனைக் கவிஞர் தமிழ்மணவாளன்,

'................................

நவராத்திரிக் கொலுவில்

இஷ்டதெய்வமெல்லாம் அடுக்கி

அலங்கரித்து

எல்லோரையும் அழைத்தாள்

பார்வையிட

அவள் கொண்ட கடவுள் அபிமானத்தால்

எல்லா சாமியும் இல்லம் வந்தன

அவளின் மாமனார் அப்பாசாமி

மட்டும்

இறுதிவரைக்கும்

இல்லம் வராமலே இறந்து போனார்

முதியோர் காப்பகத்தில்'

என்ற கவிதைவரிகள் இளையதலைமுறையினரின் உதாசீனத் தன்மையை வெளிப்படுத்துவனவாய் உள்ளன. புறநானூற்றில் பொன்முடியாரின் பாடலாய் அமைந்த (Tamilmanavalan, 2008),

'ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே

..........................................

ஒளிறுவாள் அருளுசமம் முருக்கி

களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' (Balasubramanian, 2004).

என்ற பாடலில் வாளைச் சுழற்றி போர்க்களத்தில் தம்குழந்தைகள் போர் செய்ய வேண்டும் என்பதைத் தாண்டி பெற்றோர்கள் தமக்கான அடிப்படைத் தேவைகளை தம்முடைய குழந்தைகள் செய்யவேண்டும் என்று விரும்புகின்றனர். பெற்றோரின் இறப்பிற்கும் பின்பு செய்யப்படும் இறுதிச்சடங்குகளை தம்பிள்ளைகள் செய்ய வேண்டுமென்றே ஒவ்வொரு பெற்றோரும் விரும்புவதுண்டு. ஆனால் மேலே சொல்லப்பட்ட கவிதையிலோ முதியோர் இல்லத்தில் இறந்த பெரியவரின் உடல்கூட வீட்டிற்குகொண்டு வரப்படாமல் இருந்துள்ளது என்ற செய்தியானது கல்நெஞ்சம் கொண்ட சமுதாயமாய் நம் மனித சமுதாயமானது மாறிவிட்டமையை உணர்த்துகின்றது.

அக்காலத்தில் மக்கள் மருத்துவம் பார்க்க மருத்துவமனை சென்றதில்லை. ஒவ்வொருவர் வீட்டிலும் ஓர் மருத்துவர் இருப்பார். அம்மருத்துவர் வேறுயாரும் இல்லை. வயதில் மூத்த பெரியோர்கள் தான். இன்று பெரியவர்கள் வீட்டில் இல்லாததால் சிறுபிரச்சனைகளுக்குக் கூட மருத்துவரைத்தேடி நாம் செல்கின்றோம். ஒரு மருத்துவராய் மட்டுமல்லாமல் வீட்டிற்கு காவலாகவும், கணவன் மனைவி இருவருக்குள் பிரிவினை ஏற்படாதவாறு காப்பவராயும் முதியோர்கள் இருந்துள்ளனர். இத்தகு சிறப்புடைய முதியோரின் இன்றியமையாமையை (Vairamuthu, 2009).

'பாழ்

ஆறில்லா ஊரும்

பெருசில்லா வீடும்

வேண்டும்

வீட்டுக்கொரு பெருசு

ஒன்று இரண்டு

மூன்று நான்கென

அடுக்கிச் சொல்லலாம்

பெருசின் பெருமையை

உள்நாக்கு வங்கியில்

சேமித்த பழமொழி செலவழிக்கும்

இருமலின் தயவில்

குறைந்த செலவில்

ராக்காவல் புரியும்

............................

கணவன் மனைவி சண்டைச் சத்தம்

வெளியேற விடாமல்

வெற்றிலையை உரலில் போட்டிடிக்கும்

சிரிக்கும்

சிரிப்புக்கும்

செல்லமாய்வையும்

தலைகீழாய் உலுக்கி

வலிக்காமல் பிள்ளைக்கு

வாயு பிரிக்கும்

இவையாவும் காரணங்களின்

குறைந்தபட்சமெனினும்

அதிகபட்சமாய்

சாவுக்கு அழுகை வருமா என்று

சோதிக்க உதவும் என்றேனும்'

என்ற கவிதைவரிகள் மூலம் விளக்குகின்றார் (Vairamuthu, 2005).

முதியோர்கள் வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள் அல்லர், போற்றப்பட வேண்டியவர்கள் என்பதை (Vijay, 2007),

'...................................

மூத்தவர்கள்

பழுதடைந்த விளக்குகளல்ல

பாதுகாக்கப்பட வேண்டிய விளக்குள்

.....................................' (Vijay, 2007)

என்று முதியோர்களின் முக்கியத்துவத்தை, போற்றி பாதுகாக்கப்பட வேண்டிய தன்மையினை விளக்குகிறார்.

## முடிவுரை

பண்படுவது பண்பாடு. மனித இனத்தைப் பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்தி தமக்குரிய செம்மையையும், உயர்வையும் எடுத்தியம்பும் சிந்தனை வெளிப்பாடே ஆகும். அவசரத்தைத் தோளில் சுமந்து கொண்டு திரியும் பிள்ளைகள் தம் பெரியோரைப் பேணல் எனும் பண்பாட்டை மறந்து தங்களது பெற்றோர்களின் தேவைகளை காது கொடுத்துக் கேட்க நேரமில்லாமல் ஓடிக்கொண்டு இருப்பதால் பெற்றோர் முதியோர் இல்லம் நோக்கிச் செல்கின்றனர் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 1-ஆம் தேதி சர்வதேச 'முதியோர் தினம்' ஆக கொண்டாடப்பட்டாலும், இந்தியாவில் முதியோர்களுக்கு ஆதரவாக எத்தனையோ சட்டதிட்டங்கள் கொண்டு வரப்பட்டாலும் முதியோர்களை புறந்தள்ளும் நிலை மாறப் போவதும் இல்லை முதியோர்களின் எண்ணிக்கை குறையப்போவதும் இல்லை. முதியோரை புறந்தள்ளும் நிலை பற்றி கவிதை, திரைப்படம், நாவல் என எத்தனையோ இலக்கியங்கள் தோன்றினும் அப்படைப்பை வாசிக்கும் பொழுது அல்லது பார்க்கும் பொழுது மட்டுமே முதியோரின் முக்கியத்துவத்தை நாம் உணர்வோமே தவிர அடுத்த நொடியில் அதனை நாம் மறந்துவிடுவோம். அப்படிமறக்காமல் முதியோர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இன்றுள்ள முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை குறைந்தும் எதிர்காலத்தில் முதியோர் இல்லங்கள் தோன்றாமல் இருக்க வேண்டும் என்பதை உணர்த்துவதாய் இவ்வாய்வு அமைகின்றது.

## References

Arun Bharathi, (2009) Maanoodu Poradum Veergal, Tamil Alai, Chennai, India.

Balasubramanian, K.V., (2004) Purananuru, Paavai Publications, Thanjavur, India.

Lavanya Sundararajan, (2010) Neerkola Vazhvai Natchi, Aganalikai, Chennai, India.

Neiveli Bharathikumar, (2010) Michamirukum Eram, Annai Rajeswari Pathippgam, Chennai, India.

Puliyur Kesikan, (2010) Thirukkural Pulavar Kulanthai Urai, Shivalinga Publisher's Association, Erode, India.

Raja, K.S., (2002) Muthiyorin Prachanaigalum Theervum, Anu Pathippagam, Chennai, India.

Tamilmanavalan, (2008) Puravali Salai, Komalivalli Pathippagam, Chennai, India.

Vairamuthu, (2005) Konjam Theneer Niraiya Vaanam, Surya Pathippagam, Chennai, India.

Vijay, P., (2007) Kaagitha Marangal, Kumaran Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License